உ

சிவமயம்



உசன் மிருசுவில்


அமரர் **கார்த்திகேசு நடராசா** அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம்மையெல்லாம் உங்கள் அன்பால் கவர்ந்த எங்கள்
குடும்பத் தலைவரே, எங்கள் பாசத்துக்குரியவரே,
உங்கள் பிரிவு ஆற்றாது தவித்திடும் நாம் என்றுமே
உங்கள் நினைவாய், உங்கள் பாதம் பற்றி எம்
கண்ணீரைப் பூக்களாக்கி அர்ச்சனை செய்து உங்கள்
திருவடிகளில் இம்மலரினை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்கள் இதய விளக்கு!



தோற்றம்
11
09
1929

மறைவு
05
11
2006

# அமரர். திரு கார்த்திகேசு நடராசா

## திதி வெண்பா

சிறப்புமிகு வியவருடம் சீர் புரட்டாதி
பௌர்ணமி ஐந்து ஞாயிறு - திதியில்
வல்லவன் நடராசா வானுலக வாழ்வெடுத்து
ஆதிசிவனோடு அமர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

## சிதம்பரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியும் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதோ இந்த மாநிலத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே! சற் குமரேசா
க்றையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவனையாளர்
சிவ சிவ என்றிடத் தீவனை மாளுஞ்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்றிடச் சிவகதி தானே.

## பட்டினத்தார் பாடல்

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சிவபுராணம்

**தொல்லை யிலும் பிறவி சூழும் தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் மென்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா ஆநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யாவிமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு வழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக் கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பெரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்றும்
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய
## கந்தசஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்து ஓங்கும் நி'டையுங் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை

***

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக! வருக! மயிலோன் வருக
இந்திரன் முதலாஎண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச! ரரரர ரரர
ரிவண பசவ ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம!
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றெ ன்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக!
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தஅணி மார்பும்
செப்ப ழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணை முழந் தாளும்
திருவடியதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செகன
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
என் தலை வைத் துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க!
நாசிகளி யிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்து திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் மிரண்டும் கதிர்வேல் காக்க
என் னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்ன வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் லிருதோள் வளம் பெறக் காக்க!
பிடரிகளி இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல்காக்க!
பழு பதினாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல்காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டமி இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியிணை அருள்வேள் காக்க!
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பா நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரை யிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்காமுனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட!
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண் முடி மண்டையும்
பாவைகளு டனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதா ளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டு அலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டியுருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெகுண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங் குன்மம் சொக்குச் சிரங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக்கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன் னருள் ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பி
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனை
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொண்ட என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக் கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆலயதரிசன விதி

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் தினந்தோறும் திருக்கோவிலுக்குச் சென்று விதிப்படி பயபக்தியுடன் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சுவாமிதரிசனஞ் செய்ய இயலாதவர், சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி, ஸ்கந்த சஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலேனும் தவறாது செய்தல் வேண்டும்.

சுவாமி தரிசனம் செய்ய விரும்புவோர், திருக்கோயிலுக்குச் சமீபத்திலேயுள்ள புண்ணிய தீர்த்தத்தில் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு பரிசுத்தமாகக் கோயிலுக்குப் போதல் வேண்டும்.

போகும்போது ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், பத்திரபுஷ்பம் முதலியன வைத்து அரைக்குக் கீழ்ப்படாத மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும்.

ஆலயத்திற்குச் சமீபித்ததும், ஸ்தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கடவுளை மனதிலே தியானித்துக் கொண்டே உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமுஞ் செய்தல் வேண்டும். திரயாங் நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அஷ்டாங்க நமஸ்காரமாவது : தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு அங்கங்களும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது: தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்புகளும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரயாங்க நமஸ்காரமாவது : சிரசிலே இரண்டு கைகளையுங் குவித்தல்.

நமஸ்காரம் முன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும் பண்ணல்வேண்டும்.

நமஸ்காரம் பண்ணும்போது கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசை வைத்து நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்.

நமஸ்காரம் செய்து முடித்தவுடனேயே எழுந்து பிரதஷ்ணம் பண்ணல் வேண்டும்.

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதஷ்ணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும் பார்வதிதேவியாரையும் விஷ்ணுவையும் நான்குதரமும் பிரதஷ்ணம் பண்ணல் வேண்டும்.

பிரதஷ்ணம் பண்ணும் ஆவரணத்திலே ஸ்தூபி நிழலேனும் துவஜஸ்தம்ப நிழலேனும் இருப்பின் அந்நிழலில் மூன்று கூறுநீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். சுவாமி, உற்சவங் கொண்டருளுங் காலத்திலே உடன் செல்லும் பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம்.

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதஷ்ணம் நமஸ்காரம் முதலியவை பண்ணலாகாது.

பிரதஷ்ணம் முடிந்தவுடன் சந்நிதானத்தில் மீண்டும் நமஸ்காரஞ்செய்து உள்ளே போய்க் கடவுளைத் தரிசித்து சுத்தமான சித்தத்துடனே பக்திரஸம் மிகுந்த தோத்திரங்களை இயன்றமட்டும் இராகத்துடனே பாடித் துதி செய்தல் வேண்டும்.

பின் அர்ச்சகரைக் கொண்டு பத்திர புஷ்பங்களினால் சுவாமிக்கு அர்ச்சனை செய்வித்து, தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் முதியவற்றை நிவேதிப்பித்து, கற்பூராராத்திரிகம் பரிமாறப் பண்ணுவித்து, அவருக்குத் தம்மால் இயன்ற தட்ஷிணை கொடுத்து அவரிடமிருந்து விபூதி பிரசாதங்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பின் சுவாமியைத் தரிசித்துக் கொண்டு, புறங்காட்டாது பலிபீடத்துக்கு இப்பால் வந்து நமஸ்காரஞ்செய்து வடக்கு முகமாக இருந்து சுவாமியை மனதிலே தியானஞ்செய்துகொண்டு தன்னால் இயன்ற மந்திரம் ஜெபித்துப் பின் எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நிற்கும் நினைவுகள்

**திரு. கார்த்திகேசு நடராசா அவர்களுக்கு கனடா வாழ் உசன் மக்கள் ஒன்றியத்தின் இதய அஞ்சலி:-**

கல்வி, செல்வம் பக்தி ஆகிய மூன்றினையும் தன்வசம் கொண்ட அழகிய உசன் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து தற்போது புலம் பெயர்ந்து கனடா மண்ணில் வாழ்ந்து கொண்டாலும் பிறந்த மண்ணைப் பொன் என மதித்து வாழ்ந்து வருகிறோம்.

இந்த நிலையில் பண்பு, பக்தி ஆகிய சிறந்த குணங்களை உள்ளடக்கி சைவ மேம்பாட்டிற்கு உறுதுணையாக வாழ்ந்து செயல்பட்ட திரு. கார்த்திகேசு நடராசா அவர்கள் காலமாகிக் கொண்டது எம் கிராமத்துக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

மரணம் என்பது மனிதரின் வாழ்வில் என்றோ ஒரு நாள் இடம் பெறும் விடயமாக இருந்தாலும் சிலரது மரணங்கள் மக்கள் மனதில் கூடிய வேதனைக்கு உள்ளாக்குகின்றன. இந்த வகையில் இவரின் பிரிவும் எம் யாவரையும் கலங்க வைத்துள்ளது.

இவர் நல்லபண்புடன் சிறந்த தந்தையாகவும் தன் நான்கு மக்களுக்கும் தன் கடமைகளைச் சரிவரச்செய்து நாட்டு நிலைமை காரணமாக யாவரையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு தனது துணைவியாருடன் பிறந்த மண்ணை நேசித்தவண்ணம் அங்கு வாழ்ந்து வந்தார்.

அமரர் கா. நடராசா அவர்கள் உசன் கிராமத்தில் கல்விபயின்று அங்கேயே விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டும் எமது முருகன் ஆலயத்துக்கு தொண்டாற்றிக் கொண்டிருந்தார். காலத்துக்காலம் நடைபெறும் விழாக்கள் பூசைகளில் முக்கிய பங்கு கொண்டு தேவார பதிகங்கள் காதுக்கு மிகவும் இனியமுறையில் எம்மையெல்லாம் பக்தி பரவசமாக்கிக் கொண்டகாலங்கள் இன்றும் எம்காதுகளில் ஒலித்தவண்ணம் மனதைக் கலங்க வைத்துக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டி மக்களின் மனதைக் கவர்ந்து கொண்டவர் நம் கிராமத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்துக்கு அண்மையாக அந்த இடத்தில் அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழக்கூடிய அழகான வீட்டினை அமைத்து தன் வீடுவரை அழகான வீதியை அமைத்துக்கொண்டமை அவர்களின் குடும்பத்திற்கு மட்டுமன்றி விநாயகர் தரிசனம் செய்யச் செல்லும் பக்தர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்து எம் கிராமத்தையும் அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது.

மேலும் பிறந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் சேவைகள் செய்து கொண்ட அமரர் நடராசா அவர்கள் செய்து கொண்ட அரும்பெரும் சேவை தன் பிள்ளைகளுக்கும் நாட்டுப்பற்றினை நாளடைவில் உருவாக்கிவைத்தமையே ஆகும். இதன் பிரதிபலிப்பாக அன்னாரின் சிரேஸ்டபுத்திரன் திரு. வசந்தராஜா அவர்கள் போக்குவரத்துக்காக அல்லலுறும் மக்களுக்கு வீதி அமைக்க முற்பட்டு எமது சங்கத்துக்கு தானாக முன்வந்து ரூபா 50000 ஐ வழங்கிக் கொண்டமை மிகவும் பாராட்டத்தக்கது. அது மட்டுமன்றி அன்னாரின் அடுத்த புதல்வன் திரு. விமலராஜா அவர்கள் அமைத்துக் கொடுத்த பாடசாலையின் சுற்றுமதில் பாடசாலையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. இப்படியான நாட்டுப்பற்றினைப் பிள்ளைகளின் மத்தியிலும் உருவாக்கி எமக்கும் எம் கிராமத்துக்கும் ஆற்றிய சேவை எம் மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. என்று சொல்லிக்கொள்வதில் எமது சங்கம் பெருமையடைகிறது.

இறுதியாக அமரத்துவம் அடைந்த திரு. கா. நடராசா அவர்களின் மறைவு எம் கிராமத்துக்கும் மக்களுக்கும் அவரது குடும்பத்துக்கு பேரிழப்பாக இருந்தாலும் எம் செயலது யாதொன்றுமில்லை எல்லாம் அவன் செயல் என்ற நம்பிக்கையுடன் அன்னாரின் ஆத்மாசாந்திக்காக பிரார்த்தித்து அவரது துயரால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் எம்மக்கள் அனைவரின் சார்பாகவும் கவலையையும் ஒத்துணர்வையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கனடாவாழ் உடசன் மக்கள் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

நாற்பத்தைந்து ஆண்டுகள் கைபிடித்த காலத்தில்
நாம் பிரிந்திருக்கவில்லை. பிரிந்ததுதான்
ஒரேடியாகப் பிரிந்துவிட்டீர்கள் ஐயா
உங்களைப் பிரிந்த நான்
சிறகொடிந்த பறவைபோல
தவிப்பதுதான் தெரியவில்லை ஐயா?
சற்று நேரம் சரிந்து தூங்கப்போகிறேன்
என்று சரிந்தீர்கள் ஐயா
மீண்டும் எழுந்திருக்காமல்
இறைவனுடன் கலந்துவிட்டீர்கள் ஐயா
என்னைத் தன்னந்தனியே தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீரோ தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திக்கு
இறையருள் வேண்டுகின்றேன்.
சாந்தி சாந்தி சாந்தி

## மக்கள் புலம்பல்

இறைவா எங்கள் அன்புத்தந்தையை
எங்களிடம் இருந்து ஏன் பிரித்தாய்
என்ன பாவம் செய்தோம் ஏன் இந்த தண்டனை
நீங்கள் கண்மூடியபோது பக்கத்தில் இருந்து அழக்கூட
இயலாத பாவிகளாகிவிட்டோம்.
உங்களின் இனிமைக்குரலால் தேவாரம் பாடுவாயே
இனிமேல் எப்படி எந்த பிறப்பில் கேட்போமோ
உங்களோடு பழகிய நிகழ்வுகளே - அந்த நினைவுகளே
இன்றும் உறுதுணையாக நின்று வழிகாட்டுகின்றன.
எமது கடமையை கடைசிநேரம் செய்ய எமக்கு
கொடுத்து வைக்கவில்லையென்று
தவியாய் தவிக்கின்றோம். தெய்வத்துடன் தெய்வமாகிய
எமது அன்பு தந்தையே உங்கள் ஆத்மா
சாந்தியடைந்து மறு பிறப்பு என்று ஒன்றிருந்தால்
மீண்டும் வந்து எங்கள் குடும்பத்தில்
பிறந்திடுங்கள் என வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

மாமா என்று நாங்கள் அழைத்தாலும் நீங்கள்
ஒரு தந்தையாகவே எங்களுடன் பழகினீர்கள்
மருமகள் மருமகன் என்று கூப்பிட்டதை நாம்
கேட்கவில்லை. பிள்ளை என்றும் தம்பி என்றும்
பாசமாக கூப்பிடுவீர்கள் உங்களின் அமைதியான
நடையும் அமைதியான பேச்சும் புன்சிரிப்பும்
மறக்கமுடியாது எங்கள் எல்லாரையும் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளத்துயில் கொண்டுவிட்டீர்கள்
வெளிநாட்டுக்கு வரும் நாளை பார்த்திருந்தோம்
ஆனால் எங்கள் ஆசையை நிறைவேற்றவில்லை
உங்கள் ஆசைதான் நிறைவேறியது.
பிறந்த அந்த பொன்னான மண்ணில் சொந்த வீட்டில்
சுதந்திரக் காற்றுப்பட இறைவன் பாதம் அடைந்த
எங்கள் மாமாவுக்கு இரு கரம் கூப்பிநிற்கிறோம்.

## பேரப்பிள்ளைகள்

அப்பப்பா, அம்மப்பா உங்களோடு பழகிய
அந்த இனிய நாட்கள் மீண்டும் வராதா என்று
ஏங்கிதவிக்கிறோம்.
இளநீர் வெட்டி தந்ததும் சலிக்காமல் கிணற்றில்
தண்ணீர் அள்ளி குளிக்க வைத்ததும்
நாங்கள் மண்விளையாடிய போது அமைதியாக
கட்டியணைத்து தலைதடவி தந்த அன்பு முத்தம்
இனிமேல் கிடையாதா என்ற ஏக்கம்
இனிமேல் உங்களை பார்க்கமாட்டோமா என்று
தவிப்பது தான் தெரியவில்லையா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாகுவதற்கு?
- எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ண -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org